**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**

**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு**

**கொழும்பு புறநகர் புகையிரத கருத்திட்டம்**

# வெற்றிடம் – திட்டப் பணிக் குழு

புகையிரத செயல்திறனை மேம்படுத்தும் திட்டல் (REIP) இருக்கும் கீழ் குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களுக்காக திட்ட பணிக் குழுவுக்கு ஆட்சேர்ப்புக்காக முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 01/2019 இற்கு அமைய கொழும்பு புறநகர் புகையிரத கருத்திட்ட முகாமைத்துவ பிரிவின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தத் திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கி கடனின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கை புகையிரத திணைக்களம் இணைந்து செயற்படுத்துகிறது.

அதன்படி மேலுள்ள திட்டத்தில் இருக்கின்ற கீழ் குறிப்பிடப்பட்ட வெற்றிட பதவிகளை நிரப்புவதற்கு ஆங்கில மொழி தொடர்பில் தேர்ச்சி, அரச சட்ட ஒழுங்குகள் தொடர்பில் பரீட்சயம் மற்றும் வெளிநாட்டு உதவிகளை பெறுகின்ற திட்டத்தின் கீழ் ஆட்களை மீளக் குடியேற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அனுபவம் ஆகிய முன் தேவைகளை பூர்த்தி செய்கின்ற தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | பதவி | சம்பள அளவு | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | உதவி திட்ட பணிப்பாளர் (நிதி) | PS-4 | 01 |
| 02. | உதவி திட்ட பணிப்பாளர் (பொறியியல்) | PS-4 | 01 |
| 03. | சிரேஷ்ட பெறுகை அதிகாரி | PS-5 | 01 |
| 04. | சிரேஷ்ட தொழில்நுட்ப அதிகாரி | PS-5 | 01 |
| 05. | திட்டச் செயலாளர் | PS-6 | 01 |

**மேல் குறிப்பிடப்பட்ட பதவிகள் தொடர்பில் தகைமைகள் / அனுபவம் தொடர்பிலான தேவைகள் பின்வருமாறு.**

## 01. உதவி திட்ட பணிப்பாளர் (நிதி) - பதவி எண்ணிக்கை - 01

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டலுக்கு அமைய பிரதித் திட்ட பணிப்பாளர் (நிதி) இன் கீழ் பணிகள்/ செயற்பாடுகளை மேற்கொண்டு திட்டப் பணிப்பாளருக்கு முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்பதோடு, திட்டம் தொடர்பில் வரவு செலவுத் திட்ட ஆவணம், மதிப்பீட்டை தயாரித்தல், காலாண்டு அறிக்கைகளை தயாரித்தல், கொடுப்பனவு செயற்பாடுகள் உட்பட அனைத்து நிதி செயற்பாடுகளையும் மேற்கொள்ளல் மற்றும் பொறுப்பு வகித்தல் வேண்டும்.

**தேவையான தகைமைகள்**

(கீழுள்ள வரிசை இலக்கம் 01 அல்லது 02 இல் ஒரு தகுதி)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட குறித்த துறையில் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

   **அல்லது**

   குறித்த துறையில் பட்டத்திற்கு நிகரான தகைமை ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை ஒன்றை பெற்றிருத்தல்.

   **அல்லது**

   குறித்த துறை சார்ந்த தொழில்முறை நிறுவனம் ஒன்றில் முழு அங்கத்தவராக இருத்தல் அல்லது அவ்வாறான நிறுவனம் ஒன்றில் இணையான தொழில்முறை தகைமை ஒன்றை பெற்றிருத்தல்.

   **மற்றும்**

   நிகரான தன்மையுடைய வெளிநாட்டு நிதியில் வழங்கப்படும் திட்டம் ஒன்றில் நிதித்துறை தொடர்பில் குறைந்தது 09 ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2. அரசின் தீவு முழுவதற்குமான கணக்காளர் சேவை III/II ஆவது தரத்தின் அதிகாரி ஒருவராக இருத்தல்

   அத்துடன்

   III/II தரத்தின் பதவி ஒன்றில் குறைந்தது 9 ஆண்டுகள் சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

## 02. உதவி திட்ட பணிப்பாளர் (பொறியியல்) - பதவி எண்ணிக்கை - 01

திட்டப் பணிப்பாளரின் கீழ் பணிகள்/ செயற்பாடுகளை மேற்கொண்டு திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு திட்டப் பணிப்பாளருக்கு முழு ஒத்துழைப்பை வழங்கல் வேண்டும் என்பதோடு, செயற்படுத்தும் ஆலோசனை நிறுவனம் மற்றும் இலங்கை புகையிரத சேவையின் திட்ட பணிக் குழுவுடன் ஒருங்கிணைத்தல், திட்டத்தின் மூலம் நிதியைப் பெற்று நிர்மாணிக்கப்படும் வேலைத்தள மேற்பார்வை மற்றும் ஒப்பந்தங்களை நிர்வகித்தல்.

**தேவையான தகைமைகள்**

(கீழுள்ள வரிசை இலக்கம் 01 அல்லது 02 இல் ஒரு தகுதி)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட, பொறியியல் பிரிவில் சிவில் பொறியியல் துறையில் முதல் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

   **அல்லது**

   பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட, பொறியியல் பிரிவில் சிவில் பொறியியல் துறையில் முதல் பட்டத்திற்கு நிகரான பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

   **அல்லது**

   சிவில் பொறியியல் துறை தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட மேல் குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கு நிகரான தகைமைகளைக் கொண்டிருத்தல் அல்லது அவ்வாறான நிறுவனம் ஒன்றில் முழு அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

   அத்துடன்

   நிகரான தன்மையுடைய வெளிநாட்டு நிதியில் வழங்கப்படும் திட்டம் ஒன்றில் பொறியியல் துறை தொடர்பில் குறைந்தது 09 ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2. அரசின் தீவு முழுவதற்குமான பொறியியல் சேவை III/II தரத்தின் அதிகாரி ஒருவராக இருத்தல்

   **மற்றும்**

   III/II தரத்தின் பதவி ஒன்றில் குறைந்தது 9 ஆண்டுகள் சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

## 03. சிரேஷ்ட பெறுகை அதிகாரி - பதவி எண்ணிக்கை - 01

பிரதித் திட்டப் பணிப்பாளர் (பெறுகை) இன் கீழ் பணி/ நிலைகளை மேற்கொண்டு திட்டத்தை செயற்படுத்துவதற்கு சிரேஷ்ட பெறுகை அதிகாரியின் மூலம் பெறுகை திட்டங்களை தயாரித்தல், பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவை அமைத்தல், ஆசிய வங்கி வழிகாட்டலுக்கு அமைய பெறுகை ஆவணங்களை தயாரித்தல் மற்றும் ஒப்பந்தங்களை தயாரித்தல் வேண்டும்.

**தேவையான தகைமைகள்**

(கீழுள்ள வரிசை இலக்கம் 01 அல்லது 02 இல் ஒரு தகுதி)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் குறித்த துறையில் முதல் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

   தொழில்நுட்ப துறை சார்ந்த பதவி ஒன்றுக்காக மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு அங்கீகரிக்கும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 07 தரத்திற்கு குறையாத தேர்ச்சி தொடர்பில் சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

   **மற்றும்**

   நிகரான தன்மையுடைய வெளிநாட்டு நிதியில் வழங்கப்படும் திட்டம் ஒன்றில் பெறுகை செயற்பாடுகள் தொடர்பில் குறைந்தது 04 ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

   **அல்லது**

2. தொழில்நுட்ப துறை சார்ந்த பதவி ஒன்றுக்காக மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு அங்கீகரிக்கும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 06 தரத்திற்கு குறையாத தேர்ச்சி தொடர்பில் சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

   **மற்றும்**

   நிகரான தன்மையுடைய வெளிநாட்டு நிதியில் வழங்கப்படும் திட்டம் ஒன்றில் பெறுகை செயற்பாடுகள் தொடர்பில் குறைந்தது 09 ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

   **அல்லது**

3. தொழில்நுட்ப துறை சார்ந்த பதவி ஒன்றுக்காக மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு அங்கீகரிக்கும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 05 தரத்திற்கு குறையாத தேர்ச்சி தொடர்பில் சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

   **மற்றும்**

   நிகரான தன்மையுடைய வெளிநாட்டு நிதியில் வழங்கப்படும் திட்டம் ஒன்றில் பெறுகை செயற்பாடுகள் தொடர்பில் குறைந்தது 14 ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

## 04. சிரேஷ்ட தொழில்நுட்ப அதிகாரி - பதவி எண்ணிக்கை - 01

உதவி திட்ட பணிப்பாளரின் (பொறியியல்) பணிகள்/ செயற்பாடுகளை மேற்கொண்டு திட்டத்தை செயற்படுத்துவதற்கு திட்ட பணிப்பாளருக்கு முழு ஒத்துழைப்பை வழங்குதல் வேண்டும் என்பதோடு திட்டத்தினால் நிதி அளித்து நிர்மாணிக்கப்படும் வேலைத் தளத்தை சோதித்தல், அறிக்கை சமர்ப்பித்தல், அளவு மேற்பார்வை செயற்பாடு மற்றும் விலைப்பட்டியல் சோதனை மற்றும் ஒப்பந்த முகாமைத்துவத்திற்கு உதவுதல்.

**தேவையான தகைமைகள்**

(கீழுள்ள வரிசை இலக்கம் 01 அல்லது 02 அல்லது 3 இல் ஒரு தகுதி)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்படும் குறித்த துறையில் முதல் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

   **அல்லது**

   தொழில்நுட்ப துறை சார்ந்த பதவி ஒன்றுக்காக மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு அங்கீகரிக்கும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 07 தரத்திற்கு குறையாத தேர்ச்சி தொடர்பில் சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

   **மற்றும்**

   குறித்த துறையில் (குறிப்பாக நிகரான தன்மையுடைய வெளிநாட்டு நிதியில் வழங்கப்படும் திட்டம் ஒன்றில்) 04 ஆண்டுகள் அனுபவம், அளவு மதிப்பீடு தொடர்பில் தொழில் தகைமை ஒன்றை பெற்றிருத்தல் மற்றும் புகையிரத துறைக்கு தொடர்புடைய அனுபவம் ஒன்றை பெற்றிருத்தல் மேலதிக தகைமையாக அமையும்.

   **அல்லது**

2. தொழில்நுட்ப துறை சார்ந்த பதவி ஒன்றுக்காக மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு அங்கீகரிக்கும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 6 தரத்திற்கு குறையாத தேர்ச்சி தொடர்பில் சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

   **மற்றும்**

   குறித்த துறையில் (குறிப்பாக நிகரான தன்மையுடைய வெளிநாட்டு நிதியில் வழங்கப்படும் திட்டம் ஒன்றில்) 09 ஆண்டுகள் அனுபவம், அளவு மதிப்பீடு தொடர்பில் தொழில் தகைமை ஒன்றை பெற்றிருத்தல் மற்றும் புகையிரத துறைக்கு தொடர்புடைய அனுபவம் ஒன்றை பெற்றிருத்தல் மேலதிக தகைமையாக அமையும்.

   **அல்லது**

3. தொழில்நுட்ப துறை சார்ந்த பதவி ஒன்றுக்காக மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு அங்கீகரிக்கும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 5 தரத்திற்கு குறையாத தேர்ச்சி தொடர்பில் சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

   **மற்றும்**

   குறித்த துறையில் (குறிப்பாக நிகரான தன்மையுடைய வெளிநாட்டு நிதியில் வழங்கப்படும் திட்டம் ஒன்றில்) 14 ஆண்டுகள் அனுபவம், அளவு மதிப்பீடு தொடர்பில் தொழில் தகைமை ஒன்றை பெற்றிருத்தல் மற்றும் புகையிரத துறைக்கு தொடர்புடைய அனுபவம் ஒன்றை பெற்றிருத்தல் மேலதிக தகைமையாக அமையும்.

## 05. திட்டச் செயலாளர் - பதவி எண்ணிக்கை - 01

திட்ட பணிப்பாளரின் கீழ் பணிகள்/ செயற்பாடுகளை மேற்கொண்டு திட்ட பணிப்பாளர் அலுவலகத்தின் அனைத்து ஒருங்கிணைப்பு செயற்பாடுகளுக்காக திட்டப் பணிப்பாளருக்கு முழு ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும் என்பதோடு, புகையிரத திணைக்களம், போக்குவரத்து அமைச்சு உட்பட அனைத்து பங்கு நிறுவனங்களுடன் முறையான ஒருங்கிணைப்பை பேணுதல் வேண்டும்.

**தேவையான தகைமைகள்**

(கீழுள்ள வரிசை இலக்கம் 01 அல்லது 02 அல்லது 03 இல் ஒரு தகுதி)

1. ஆங்கிலம் மற்றும் சிங்களம்/ தமிழ் பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் 03 திறமைச் சித்திகளோடு 06 பாடங்களில் க.பொ.த. (சா.தர) சித்தி பெற்றிருத்தல்.

   **மற்றும்**

   அரசின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் செயலாளர் கற்கை ஒன்றை கற்றிருத்தல் அல்லது பட்டய செயலாளர் பதவி வரை பரீட்சை/ தகைமைகளை கற்று வருதல்.

   **அத்துடன்**

   நிகரான தன்மையுடைய வெளிநாட்டு நிதியில் வழங்கப்படும் திட்டம் ஒன்றில் 06 ஆண்டுகள் சேவை அனுபவம் ஒன்றை பெற்றிருத்தல்.

2. நிகரான தன்மையுடைய வெளிநாட்டு நிதியில் வழங்கப்படும் திட்டம் ஒன்றில் 06 ஆண்டுகள் சேவை அனுபவம் ஒன்றை பெற்றிருத்தல்.

**சம்பள அளவு :**

**PS - 04 தரம் ரூபா 155,000 - 170,000**
**PS - 05 தரம் ரூபா 105,000 - 113,000**
**PS - 06 தரம் ரூபா 67,000 - 73,000**

**பொது நிபந்தனைகள்:**

1. வயது வரம்பு. அனைத்து விண்ணப்பதாரர்களும் 64 வயதுக்கு குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும். (64 வயதுக்கு மேற்பட்டவர்கள் கருத்திற் கொள்ளப்படமாட்டார்கள்).
2. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக பங்களிப்பு (ஊழியர்களிடம் 8% மற்றும் தொழில் வழங்குநரிடம் 12%).
3. சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பில் நிபந்தனைகள்: ஆரம்பத்தில் இந்த நியமனம் ஒப்பந்த அடிப்படையில் ஓர் (01) ஆண்டுக்கானது என்பதோடு, திருப்திகரமான செயல்திறன் மற்றும் திட்டக்கால வரம்பு அடிப்படையில் சேவைக் காலத்தை நீடிக்க முடியும்.

**விண்ணப்பம்:**

மேல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் தமது கல்வி, தொழில் தகைமைகள் மற்றும் குறித்த துறைகளில் அனுபவம் தொடர்பில் விபரம் மற்றும் உறவினர் அல்லாத பரிந்துரையாளர்கள் இருவரினது விபரங்கள் தரப்பட்ட விண்ணப்பங்களை 2026.01.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு திட்டப் பணிப்பாளர், புகையிரத செயல்திறனை மேம்படுத்தும் திட்டம், இல. 217, கொட்டா வீதி, கொழும்பு 08 என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

அரச சேவை/ அரச சார்பு சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த திணைக்கள தலைவர்கள் ஊடாக அனுப்ப வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்**
**கொழும்பு புறநகர் புகையிரத கருத்திட்டம்**
**இல. 217, கொட்டா வீதி, கொழும்பு 08.**
**2026.01.13**